எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், 110, அண்ணா சாலை, சென்னை–2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப.,
இணை இயக்குநர்(பொ)

இயக்.செ.மு.ஆ.எண்.இ1/25133/2015 நாள்: 31.01.2018

பொருள் பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இத்துறைக்கு தட்டச்சராக பணி நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.எம்.சுமதி உள்ளிட்ட ஐந்து நபர்கள் நேரடி நியமனம் மூலம் தட்டச்சர்களாக பணி நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டமை – 5 நபர்கள் பணியேற்றுள்ளது – அவர்களது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 க.எண்.906/PSD-F/2016 நாள் 22.01.2016
2. இயக்.செ.மு.ஆ.எண்.இ1/25133/2015 நாள் 04.02.2016
3. செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 க.எண்.906/PSD-F/2016 நாள் 02.09.2016
4. இயக்.செ.மு.ஆ.எண்.இ1/25133/2015 நாள் 06.10.2016
5. செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 க.எண்.906/PSD-F/2016 நாள் 03.03.2017
6. இயக்.செ.மு.ஆ.எண்.இ1/25133/2015 நாள் 23.03.2017

----

**ஆணை:**

பார்வை 1, 3 மற்றும் 5–ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடிதத்தின்படி செல்வி.எம்.சுமதி உள்ளிட்ட ஆறு நபர்கள் இத்துறைக்கு நேரடி நியமனம் மூலம் தட்டச்சர்களாக பணி நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2, 4 மற்றும் 6ல் காணும் இயக்கக செயல்முறை ஆணைகளின்படி இத்துறையில் தட்டச்சர்களாக பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

2) இவர்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 5 தட்டச்சர்கள் அவர்களின் பெயருக்கு எதிரே கலம் 3ல் குறிப்பிட்டுள்ள அலகிலும் மற்றும் கலம் 4ல் குறிப்பிட்டுள்ள நாட்களிலும் தட்டச்சர்களாக பணியேற்றுள்ளனர்.

அட்டவணை

| வ. எண். | பெயர் | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செல்வி எம்.சுமதி | இயக்ககம், சென்னை–2 | 01.04.2016 மு.ப |
| 2. | செல்வி.ச.இந்துமதி | இயக்ககம், சென்னை–2 | 14.10.2016 மு.ப |
| 3. | திருமதி.ஜெ.அன்னலெட்சுமி | அரசு கிளை அச்சகம், திருச்சி | 14.10.2016 மு.ப |
| 4. | செல்வி.எஸ்.காமேஸ்வரி | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 03.04.2017 மு.ப |
| 5. | திருமதி.க.மங்கையர்க்கரசி | இயக்ககம், சென்னை–2 | 23.03.2017 மு.ப |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 5 தட்டச்சர்களின் பணியானது, மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தில்/மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2013–14 மற்றும் 2014–2015ஆம் ஆண்டிற்கான குரூப் IV பணியாளர் தேர்வு குறித்த (writ petition) வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டு **அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்தும், அந்நாள்முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும்,** மேற்படி இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்றும், தகுதிகாண் பருவகாலத்தில் **"Certificate Course in Computer on Office Automation"** தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும் இத்தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர்தான் இவர்களின் தகுதிகாண் பருவம் விளம்பப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

ஜெ.ஜெயகாந்தன்,
இணை இயக்குநர்(பொ)

பெறுநர்
சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்–சம்பந்தப்பட்ட அலகுத் தலைவர்கள்–மூலமாக

நகல் பெறுநர்

1) கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், திருச்சி.
2) கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
3) உதவி இயக்குநர்(பணி.), இயக்ககம், சென்னை–2.
4) இயக்குநரின் நேர்முக உதவியாளர், இயக்ககம், சென்னை–2.
5) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை–8.
6) மாவட்ட கருவூல அலுவலர், மாவட்ட கருவூல அலுவலகம், புதுக்கோட்டை.
7) சார்நிலை கருவூல அலுவலர், சார்நிலை கருவூல அலுவலகம், திருவெறும்பூர்.
8) கண்காணிப்பாளர் 'இ' / இ2 இளநிலை உதவியாளர் மற்றும் 'இ3' உதவியாளர், இயக்ககம், சென்னை–2.
9) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3– இவர்களின் பணிநியமனம் குறித்து மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தில்/மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள (writ petition) வழக்கின் முடிவினை தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
10) உதிரி – 3 நகல்கள்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

இயக்குநரின் நேர்முக உதவியாளர்
இயக்குநரின் நேர்முக உதவியாளர்
110, அண்ணாசாலை, சென்னை–600 002